தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.17/பேரூ/2022

நாள் 30.05.2022

திரு. C. ராஜவேலு,
சத்துவாச்சாரி, வேலூர்–632 009 ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஒடுகத்தூர் பேரூராட்சி, வேலூர் மாவட்டம் ... எதிர்மனுதாரர்

வேலூர் மாவட்டம், எச்.4 பாலார் கார்டன், சத்துவாச்சாரி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. C. ராஜவேலு என்பவரது 3.2.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.02.2022ல் பெறப்பட்டு, 17/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வேலூர் மாவட்டம், எச்.4 பாலார் கார்டன், சத்துவாச்சாரி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. C. ராஜவேலு தமது 3.2.2022 நாளிட்ட புகார் மனுவில் வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் பேரூராட்சியில் 2019–2020ஆம் ஆண்டில் சுமார் ஒரு கோடி ரூபாய்க்குமேல் பொய் பில் போட்டு பேரூராட்சியின் அப்போதைய செயல் அலுவலர் திரு. கோபிநாதன் மற்றும் அப்போதைய இளநிலை உதவியாளர் திரு. ப. பிரகாஷ் ஆகியோர் பின்வரும் இனங்களில் ஊழல் செய்துள்ளனரென்றும், எனவே இதுகுறித்து விரிவான விசாரணை நடத்தி ஊழல் செய்துள்ள அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

1. <u>தெருவிளக்கு பராமரிப்புப் பொருட்கள் வாங்கியது</u>

தெருவிளக்கு பராமரிப்பு வகையில் 10.2.2020ல் டெண்டரே கொடுக்காத ஸ்ரீஜெயம் ஏஜென்சீஸ் என்ற நிறுவனத்திற்கு வவுச்சர் எண்.916 ரூ.1,80,800/–, வவுச்சர் எண்.919–ல் ரூ.1,83,843/– மற்றும் வவுச்சர் எண்.920–ல் ரூ.4,92,030/– என ஒரே நாளில் ரூ.12.00 லட்சம் ரூபாய்க்கு போலி பில் போட்டு செலவு செய்துள்ளனர்:-

| S.No | Voucher No/Date | Name of the Company | Amount paid |
|---|---|---|---|
| 1. | 913/10.02.2020 | Kanna Electricals | 1,76,755/- |
| 2. | 914/10.02.2020 | Sri Jayam Electricals | 1,80,800/- |
| 3. | 919/10.02.2020 | -do- | 1,85,700/- |
| 4. | 920/10.02.2020 | -do- | 4,97,000/- |
| 5. | 985/26.2.2020 | -do- | 1,98,210/- |

2. <u>சுகாதாரப் பொருட்கள் வாங்கியது</u>

| S.No | Voucher No/Date | Name of the Company | Amount paid |
|---|---|---|---|
| 1, | 913/10.02.2020 | Indian Agencies | 1,53,550/- |
| 2. | 984/26.02.2020 | Sri Jayam Agencies | 1,65,140/- |

சுகாதாரத்திற்கென பொருட்கள் வாங்கியதில் பிப்ரவரி 2020 மாதத்தில் மட்டுமே ரூ.3,50,000/–க்கு மேல் பில் போட்டிருக்கிறார்கள் எனில் ஆண்டுக்கு சுமார் 40 லட்சத்திற்கு மேல் செலவு செய்யப்படுகிறது.

3. கணினிக்கு டோனர் வாங்கிய வகையில் ஊழல்

| S.No | Voucher No/Date | Name of the Company | Amount paid |
|---|---|---|---|
| 1. | 353/6.9.2019 | AVT Computers, Vellore | 8,750/- |
| 2. | 422/25/09/2019 | -do- | 8,700/- |
| 3. | 507/17.10.2019 | -do- | 8,680/- |
| 4. | 512/18.10.2019 | -do- | 8,400/- |

| | | | |
|---|---|---|---|
| 5. | 526/21.10.2019 | -do- | 8,650/- |
| 6. | 552/24.10.2019 | -do- | 8,750/- |
| 7. | 736/20.12.2019 | -do- | 8,500/- |
| 8. | 965/21.02.2020 | -do- | 8,850/- |
| 9. | 1031/6.3.2020 | -do- | 8,800/- |
| 10. | 1082/18.3.20 | -do- | 8,700/- |
| 11. | 1090/19.3.20 | -do- | 8,600/- |

கணினிக்கு டோனர் ஒரே மாதத்தில் ரூ.35,000/– செலவு செய்துள்ளனர். ஆக ஆறு மாதத்திற்கு சுமார் ஒரு லட்ச ரூபாய்க்கு கணினிக்கு டோனர் வாங்க மட்டுமே செலவழித்திருக்கிறார்கள். இவை அனைத்தும் AVT Computers, Vellore என்ற ஒரே நிறுவனத்திடம் பெறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாமல் Self Cheque என Voucher No.978/26.2.2020ல் ரூ.60,000/–க்கு தனியாக பில் போட்டுள்ளார்கள். இது சம்பந்தமாக இயக்குநர், பேரூராட்சிகள் துறை அவர்களுக்கு 26.1.2021ல் புகார் மனு அனுப்பியும் நடவடிக்கை இல்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் கேட்டதற்கும், புகார் மனு மீது எடுத்த நடவடிக்கை பற்றி தகவல் கேட்பதற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் தகவல் கேட்க உரிமை இல்லை என தெரிவித்துள்ளனர். ஊழல் செய்துள்ள இரு அலுவலர்களுமே பதவி உயர்வில் சென்றுள்ளனர் என்றும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். எனவே, மேற்கண்ட ஊழல் புகார்கள் குறித்து விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்துள்ளார். மனுதாரர் தனது புகாருக்கு ஆதாரமான ஒடுகத்தூர் பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ள Bank Payment Voucher (B.P.V) நகல்களையும், பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பிய 26.1.2021 நாளிட்ட புகார் மனுவின் நகலினையும் இணைத்தனுப்பியுள்ளார்.

2. ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 16.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 22.02.2022 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் மற்றும் ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் இருவரும் 16.3.2022 நாளிட்ட நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

3. மனுதாரர் திரு. C. ராஜவேலு அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் “ஒடுகத்தூர் பேரூராட்சியில் தெரு விளக்கு பராமரிப்பில் 12 இலட்சம் ரூபாய்க்கு போலி பில் போட்டு செலவு செய்துள்ளனர். அதேபோன்று சுகாதாரப் பொருட்கள் வாங்கியதிலும் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரூராட்சி இயக்குநருக்கு புகார் மனுக்கள் அனுப்பியும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட நிகழ்வுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளவும், தவறு செய்த

பேரூராட்சி செயல் அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்திடவும் இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது 03.02.2022 நாளிட்ட புகார் மனுவில் கண்டுள்ள விவரங்களையே எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. சி. முனுசாமி 16.3.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "நான் ஒடுகத்தூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக 03.01.2022 முதல் பணிசெய்து வருகின்றேன். மனுதாரர் குறிப்பிட்டுள்ள சுகாதார பொருட்கள், தெரு விளக்கு உதிரி பாகங்கள் கொள்முதல் செய்தது குறித்து மாவட்ட நிர்வாகம், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் மேலோப்பம் பெற்று கொள்முதல் செய்யப்பட்டவர்களுக்கு காசோலை வழங்கப்பட்டுள்ளது. முறையாக அனுமதி பெற்று வாங்கப்பட்டுள்ளன. இதில் எவ்வித முறைகேடும் நடக்க வாய்ப்பில்லை. பொருட்கள் வாங்கும் இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்களில் ஒன்றான கணினிக்கு டோனர் வாங்கியது தொடர்பாக உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் 2019–20 ஆண்டுக்கான தணிக்கைத் தடை எண்.20ல் செலவின விவரத்தை குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் குறித்து பதில் அறிக்கையை முன்னாள் செயல் அலுவலர் திரு. கோ. கோபி என்பவரிடம் வாங்கி சமர்ப்பிக்க 15 நாட்கள் கால அவகாசம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தமது வாக்குமூலத்தில் தாமே பதிவு செய்து அளித்துள்ளவாறு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை முன்னாள் செயல் அலுவலர் திரு. கோ. கோபிநாதன் என்பவரிடமிருந்து பெற்று அனுப்பிடுவார் என்பதன் அடிப்படையில், 15.4.2022 வரை அவரது அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தமது 26.4.2022 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் ஒடுகத்தூர் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் கோ. கோபிநாதன் மனுதாரரின் புகார்களுக்கு பதில் அனுப்பிவைக்கக்கோரி 15.2.2022 மற்றும் 28.2.2022 நாளிட்ட கடிதங்களின்மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டபோதிலும், அவரிடமிருந்து விரிவான பதிலறிக்கை கிடைக்கப்பெறவில்லை என்றும், 21.3.2022 நாளிட்ட கடிதம் மூலம் பதிலறிக்கையை இரண்டு நாட்களில் நேரடியாகவோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார். எனவே, மனுதாரரது புகார் மனு மீது முந்தைய செயல் அலுவலரிடம் புகார்கள் குறித்து கூறிக்கொள்ள போதுமான ஆதாரங்கள்/விளக்கங்கள்/ஆவணங்கள் இல்லையென்று இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

6. ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் 16.3.2022 அன்றைய நேரடி விசாரணையின் போது மனுதாரரின் புகார் மனு மீது அளித்துள்ள 15.03.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் பேரூராட்சியில் பணி செய்த முன்னாள் செயல் அலுவலரும் எதிர்மனுதாரருமான திரு. கோ. கோபிநாதன் உதகமண்டலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் தேர்தல் தேர்வுநிலை

செயல் அலுவலராக பணி மாறுதலில் சென்றுவிட்டார் என்றும், 03.01.2022 முதல் ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலராக தான் பணியில் சேர்ந்து பணிசெய்து வருவதாகவும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 16.3.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி விளக்கமளிக்கக் கோரிதன் அடிப்படையில், முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலரை மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான பதிலறிக்கையை சமர்ப்பிக்க ஏதுவாக, நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு திரு. கோ. கோபிநாதன் அவர்களுக்கு கடிதம் அனுப்பியும் பதிலளிக்காத நிலையில், கோப்புகளை ஆய்வு செய்ததில் முறையீட்டு மனுதாரரின் புகார்களான தெருவிளக்கு பராமரிப்பு, பொது சுகாதார பொருட்கள் சப்ளை செய்தது ஆகியவை வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அனுமதியுடன் மேலொப்பம் பெறப்பட்டு, ஒப்பந்ததாரருக்கு காசோலை வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இது சம்மந்தமாக வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களால் பட்டியல் தொகை மேலொப்பம் செய்து உத்தரவிடப்பட்ட நடவடிக்கைகளின் நகல்களையும் தமது அறிக்கையுடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

மேலும், கடந்த காலங்களில் புயலால் பாதிப்பும், டெங்கு பரவல், கொரோனா பாதிப்பு என தொடர்ந்து பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் நிலவியதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தேவைான அத்தியாவசிய பொருட்கள் கூடுதலாக வாங்கும் சூழ்நிலை ஏற்பட்டதென்றும், அனைத்தும் முறையாக பதிவேடுகளில் பதியப்பட்டு தனி அலுவலரின் பார்வைக்கு வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு, பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் மேலொப்பமும் பெறப்பட்ட பின்னர் உரிய நிறுவனங்களுக்கு காசோலை மூலம் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

7. ஒடுகத்தூர் பேரூராட்சியில் 8.3.2019ஆம் தேதியன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான எண்.234–ன்படி 2019–2020ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு வருடாந்திர குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்து முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது:-

| வ. எண் | விபரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனம் |
|---|---|---|
| 1. | தெருவிளக்கிற்கு தேவையான பொருட்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் | ஸ்ரீ ஜெயம் ஏஜென்சீஸ், வேலூர் |
| 2. | பொது சுகாதாரத்திற்கு தேவைப்படும் பொருட்கள், தளவாட சாமான்கள் அதன் உதிரிப் பொருட்கள் மற்றும் கிருமிநாசினி பொருட்கள் சப்ளை செய்தல் | இந்தியன் ஏஜென்சீஸ், வேலூர் |
| 3. | குடிநீர் கைபம்பு உதிரி பாகங்கள், குடிநீர் விநியோக குழாய் உதிரி பொருட்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே இனம்வாரியாக சப்ளை செய்தல் | ஸ்ரீ கண்ணா எலட்ரிகல்ஸ் அண்டு உறார்டுவேர்ஸ்,ஆற்காடு |

8. உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, வேலூர் அவர்களால் செயல் அலுவலர், ஒடுகத்தூர் பேரூராட்சிக்கு அனுப்பப்பட்டுள்ள கடித ந.க.எண்.366/அ2/21 நாள் 15.4.2021ல் ஒடுகத்தூர் பேரூராட்சியின் 2019–2020ஆம் ஆண்டுக்கான வருவாய் மற்றும் மூலதன நிதி மற்றும் இதர நிதிக் கணக்குகளுக்கான தணிக்கை மேற்கொள்ளப்பட்டு, தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகளுடன் தணிக்கை அறிக்கை அனுப்பிவைக்கப்படுவதாகவும், மேற்படி தணிக்கை அறிக்கையினை பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலுக்கு தணிக்கை அறிக்கை கிடைத்த இரு மாதங்களுக்குள் வைத்து, அதற்கான பதில்களை மூன்று நகல்களில் உள்ளாட்சி நிதித் தணிக்கை உதவி இயக்குநர், வேலூர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி அறிக்கையின் பகுதி நகலின்படி (Extract) பொது நிதி கணினி பயன்பாடுகள் ஆண்டு பராமரிப்பு செலவின அடிப்படையில் மேற்கொள்ளப்படாமல் கூடுதலாக செலவிட்டது. உரிய பின்னேற்பு பெறப்படவேண்டும். வரியினங்கள் தொகை ரூ.3,550/– அரசு தலைப்பில் செலுத்தப்பட வேண்டும் என்ற தலைப்பின்கீழ் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:-

(அ) இப்பேரூராட்சியில் உள்ள கணினிகளுக்கு டோனர் ரீபில் செய்ய மற்றும் கணினி பழுது நீக்கம் செய்ய கீழ்க்காணும் நிறுவனங்களுக்கு செலவுச் சீட்டுகளின் மூலம் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் கணினி பராமரிப்புக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட கணினி நிறுவனங்களுக்கு அலுவலகத்தில் உள்ள கணினிகளின் எண்ணிக்கையை பொறுத்து ஆண்டு பராமரிப்பு செலவினம் டெண்டர் விடப்பட்டு, குறிப்பிட்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கப்படவேண்டும். இவ்வாறு மேற்கொள்ளப்படாமல் கீழ்க்கண்ட செலவுச் சீட்டுகளின் வழி தொகை உரிய வரியினங்கள் பிடித்தம் செய்யப்படாமல் ரூ.1,77,530/– வழங்கப்பட்டுள்ளது. இச்செயலுக்கு தக்காரின் தவிற்பாணை பெறுவதுடன் உரிய செலவினங்கள் குறிப்பிட்ட அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு விபரம் தணிக்கைக்கு தெரிவிக்கப்படவேண்டும்.
ஏவிடி கம்ப்யூட்டர்ஸ்:

| செ.சீ எண் நாள் | விவரம் | யாருக்கு | தொகை |
|---|---|---|---|
| 353/ 6.9.2019 | ஒடுகத்தூர் பேரூராட்சியின் அலுவலகத்தில் உள்ள கணினியின் டோனர் ரிபில் செய்தது நிறுவனத்திற்கு காசோலை வழங்கியது | ஏவிடி கம்ப்யூட்டர்ஸ் | 8,750/ |
| 422/ 25.09.2019 | -do- | –do- | 8,700/– |
| 607/17.10.19 | -do- | -do- | 8,680/– |
| 512/18.10.19 | -do- | -do- | 8,400/– |
| 526/21.10.19 | -do- | -do- | 8,650/– |
| 552/24.10.19 | -do- | -do- | 8,750/– |
| 736/20.12.19 | -do- | -do- | 8,500/– |
| 965/21.02.20 | -do- | -do- | 8,850/– |

| | | | |
|---|---|---|---|
| 1082/ 18.3.2020 | -do- | -do- | 8,700/– |
| 1090/ 19.03.2020 | -do- | -do- | 8,600/– |
| / 29.08.2019 | அலுவலகத்தில் உள்ள கணினியின் டோனர் ரிபில் செய்தது நிறுவனத்திற்கு காசோலை அளித்தது | சன் சிஸ்டம் சொலுசன் | 8,950/– |
| 29.08.2019 | அலுவலக கணினிக்கு டோனர் மற்றும் இங்க் ரிபில் செய்தது தொகை வழங்கியது | -do- | 5,450/– |
| 01.10.19 | அலுவலகத்தில் உள்ள கணினியின் டோனர் ரிபில் செய்தது நிறுவனத்திற்கு காசோலை அளித்தது | -do- | 8,950/– |
| 16.10.19 | -do- | -do- | 8,950/– |
| 24.10.19 | -do- | -do- | 4,750/– |
| 12.11.19 | -do- | -do- | 8,950/– |
| 11.12.19 | -do- | -do- | 8,950/– |
| 07.01.2020 | கணினி டோனர் ரிபில், மவுஸ், கேனாள் டோனர் புதியதாக சப்ளை செய்தமைக்கு நிறுவனத்திற்கு காசோலை வழங்கியது | -do- | 6,750/– |
| 22.01.20 | பேரூராட்சியில் பராமரிக்கப்படும் கணினி பழுதடைந்திருந்ததை பழுது நீக்கம் செய்தமைக்கு நிறுவனத்திற்கு காசோலை வழங்கியது | -do- | 8,950/– |
| 21.2.20 | கணினி டோனர் ரீபில், மவுஸ், கேனான் டோனர் புதியதாக சப்ளை செய்தமைக்கு நிறுவனத்திற்கு காசோலை வழங்கியது | –do– | 2,550/– |
| 02.03.20 | -do- | -do- | 8,950/– |
| 06.03.20 | -do- | -do- | 8,800/– |
| | | Total | 90,950/– |

சுருக்கம்

| வ.எண் | செலவினம் | தொகை | வருமானவரி பிடித்தம் 2% |
|---|---|---|---|
| 1. | ஏவிடி கம்ப்யூட்டர்ஸ் | 86,580 | 1,731 |
| 2. | சன் சிஸ்டம் சொலுசன் | 90,950 | 1,819 |
| | மொத்தம் | 1,77,530 | 3,500/– |

இப்பேரூராட்சி ஒன்றியத்தில் தணிக்கையாண்டில் மேற்கண்ட விவரப்படி செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கு வருமானவரிச்சட்டம் 1961 பிரிவு 194 (சி)ன்படி ஓர் ஆண்டில் ரூ.75,000/– அல்லது ஒருமுறைக்கு ரூ.30,000/–க்கு மேல் தொகை வழங்கும்போது தனி நபர் எனில் 1 சதவீதமும் நிறுவனம் எனில் 2 சதவீதமும் வருமான வரி

வசூலிக்கப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், தொகை ரூ.1,77,530/–க்கு 2 சதவீத தொகை ரூ.3,550/– பிடித்தம் செய்யப்பட்டு உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு விபரம் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

9. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், அவரது வாக்குமூலம், ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட 15.3.2022 நாளிட்ட விளக்க அறிக்கை மற்றும் அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

➢ மனுதாரரின் புகார் குறித்து ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விளக்க அறிக்கையில் தெருவிளக்கு பராமரிப்பு, பொது சுகாதார பொருட்கள் கொள்முதல் செய்தமைக்கு வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அனுமதியுடன் மேலொப்பம் பெற்று உரிய ஒப்பந்ததாரருக்கு காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

➢ கணினிக்கு டோனர் வாங்கியது தொடர்பாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் 2019–2020ஆம் ஆண்டுக்கான தணிக்கைத் தடை எண்.20–ல் தடை எழுப்பப்பட்டுள்ளதென்றும், தணிக்கைத் தடையறிக்கையின் நகல் ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரால் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

➢ ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள ஆவணங்களின்படி 2019–2020ஆம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்தங்களில் (1) தெருவிளக்கிற்கு தேவையான பொருட்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் சப்ளை செய்வதற்கு ஸ்ரீ ஜெயம் ஏஜென்சீஸ், வேலூர் (2) பொது சுகாதாரத்திற்கு தேவைப்படும் பொருட்கள், தளவாட சாமான்கள் அதன் உதிரி பொருட்கள் மற்றும் கிருமிநாசினி பொருட்கள் சப்ளை செய்தலுக்கு இந்தியன் ஏஜென்சீஸ், வேலூர் ஆகிய நிறுவனங்களை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது அறியப்படுகிறது

➢ கணினிக்கு டோனர் ரீபில் செய்தது மற்றும் கணினி பழுது நீக்கம் செய்வதற்கு ஒப்பந்த நிறுவனம் இறுதி செய்யப்படாத நிலையில், செலவுச் சீட்டுகளின் வழி தொகை உரிய வரியினங்கள் பிடித்தம் செய்யப்படாமல் ரூ.1,77,530/– (ஏ.வி.டி கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்திற்கு ரூ.86,580/– மற்றும் சன் சிஸ்டம் சொலுசன் நிறுவனத்திற்கு ரூ.90,950/– ஆக மொத்தம் ரூ.1,77,530/–) வழங்கப்பட்டுள்ளதென்றும், மேலும் மேற்படி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட தொகைகளில் 2% வருமான வரிப் பிடித்தம் செய்யப்படாததால், மேற்கண்ட வரிப்பிடித்த தொகையை பிடித்தம் செய்து உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு, அதன் விபரம் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்றும் தணிக்கைத் துறை தடையறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதால், ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் முறையாக விதிகளை கடைபிடிக்காமலும், விதி மீறல் என நன்கு

தெரிந்திருந்தும் இருவேறு நிறுவனங்களுக்கு கணினி பயன்பாட்டிற்கு செலுத்துச்சீட்டுகள் மூலம் டோனர் ரிபிள் செய்தது, டோனர் புதியதாக சப்ளை செய்தது மற்றும் பழுது நீக்கம் செய்தது ஆகிய வகைகளில் ரூ.1,77,530/– செலவினம் மேற்கொண்டுள்ளார் என்பது தெளிவாகிறது.

- உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை அறிக்கையின் பகுதி நகலின்படி (Extract) பொது நிதி கணினி பயன்பாடுகள் ஆண்டு பராமரிப்பு செலவின அடிப்படையில் மேற்கொள்ளப்படாமல் கூடுதலாக செலவிட்டது. உரிய பின்னேற்பு பெறப்படவேண்டுமென்றும் தெளிவாக்கப்பட்டுள்ளது. பேரூராட்சிகளின் செலவினங்கள் உரிய வரம்பிற்குள் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென பேரூராட்சிகளின் ஆணையரின் அறிவுறுத்தங்கள் நடைமுறையில் இருந்துவரும் நிலையிலும், கூடுதல் செலவினம் உரிய அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டும், இதற்கான பின்னேற்பு ஆணையினை பெற ஒடுகத்தூர் பேரூராட்சி நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொண்டதாக தெரியவில்லை.
- இன்றியமையா பணியாக இருப்பினும், முறையாக முன்னனுமதியோ அல்லது பழுதுநீக்கம் செய்வதற்கு ஒப்பந்த நிறுவனத்தினை இறுதி செய்து பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியதே முறையாகும். தணிக்கைத் தடையின்படி கணினிக்கு டோனர் வாங்கிய நிகழ்வில் விதிமீறல் நடைபெற்றுள்ளது தெளிவாகிறது. இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

- தெருவிளக்கு பராமரிப்புப் பொருட்கள் வாங்கியது மற்றும் சுகாதாரப் பொருட்கள் வாங்கியதற்கான செலவினங்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினங்களுக்கு வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நடவடிக்கைகளில் மேலொப்பம் பெற்று, அதன் பின்னரே பட்டியல் தொகை சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பது ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது.
- எனினும், உரிய நிறுவனங்களிடமிருந்து நடைமுறையில் உள்ள விதிகளின்படி வருமானவரி, விற்பனை வரி, மேல் வரி ஆகியன முறையாக பிடித்தம் செய்யப்பட்டு அரசு கணக்கில் உரிய தலைப்பில் செலுத்தப்பட்டதாக ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலத்திலோ அல்லது விளக்க அறிக்கையிலோ இடம் பெறவில்லை.
- கொள்முதல் செய்யப்பட்ட பொருட்கள் உரிய இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டு, பொருட்கள் பயன்படுத்தியமைக்கு உரிய பணியாளரின் ஒப்பம் பெறவேண்டுமென்பது நிபந்தனைகளில் ஒன்றாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், இது குறித்து ஆவணங்கள் எதனையும் ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பிக்கவில்லை. மேலும், மேற்கண்ட பதிவேடு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.
- மனுதாரர் தனது புகார் மனுவில் Self cheque என வவுச்சர் எண்.978/26.2.2020ல் ரூ.60,000/–க்கு தனியாக பில் போட்டிருப்பதாக புகார் அளித்துள்ளார். மேற்கண்ட

தொகை அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் பயனாளியான திரு. K. புண்ணியமூர்த்தி, த/பெ. கிங்கையன், வணிகர் தெரு, ஒடுகத்தூர் என்பவருக்கு வழங்கப்பட்ட பில் தொகை என்பது அறியப்படுகிறது.

- மனுதாரரால் ஒடுகத்தூர் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திரு. கோபிநாதன் மற்றும் அப்போதைய இளநிலை உதவியாளர் திரு. ப. பிரகாஷ் ஆகியோர் ஊழல் புரிந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில், ஒடுகத்தூர் பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் இருவருக்குமான சம்மந்தம் குறித்து ஏதும் குறிப்பிடவில்லை.
- பேரூராட்சியின் தலைமைப் பதவியில் உள்ள ஒருவர், தனக்கு முந்தியோ அல்லது தனது பணிக்காலத்திற்கு பிந்தியோ முன்வைக்கப்படும் புகார்களுக்கு பேரூராட்சியிலுள்ள ஆவணங்களின் அடிப்படையில் முறையாக விளக்கமளிக்கவேண்டியது செயல் அலுவலரின் கட்டாய கடமையாகும். செயல் அலுவலரின் விளக்க அறிக்கையின் அடிப்படையிலும், புகாரின் தன்மை மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள பண இழப்புகளின் அடிப்படையிலும், தேவையெனக் கருதும் பட்சத்தில், சம்மந்தப்பட்ட செயல் அலுவலரை விசாரணைக்கு அழைக்கலாமா வேண்டாமா என்பதை இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்யுமேயொழிய, குற்றச்சாட்டுகள் குறித்து முன்தைய செயல் அலுவலரின் பதில் அறிக்கையை வாங்கி சமர்ப்பிக்க கால அவகாசத்தை தற்போதைய செயல் அலுவலர் தாமாகவே முடிவு செய்து வாக்குமூலம் அளித்துச் சென்றபோதிலும் முந்தைய செயல் அலுவலரின் விளக்கத்தினை குறிப்பிட்ட காலத்தில் பெற்று அனுப்பாதது கண்டிக்கத்தக்கது. இதுபோன்று இனிவரும் காலங்களில் செயல் அலுவலர் நடந்துகொள்வதை முற்றிலுமாக தவிர்த்திடவும் ஆவணங்களின் அடிப்படையில் புகார்கள் குறித்து குறித்த காலத்திற்குள் விளக்க அறிக்கையை அனுப்பி வைக்கவேண்டுமென்பது தெளிவாக்கப்படுகிறது.
- கணினிக்கு டோனர் வாங்க வேண்டியது அவசியமென கருதும்பட்சத்தில் பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநரது முன்னனுமதியைப் பெற்று, முறையாக ஓர் நிறுவனத்தினை ஒப்பந்த முறையில் நியமிக்கவேண்டிய நிலையில், விதிகளை மீறி இருவேறு நிறுவனங்களுக்கு செலவுச்சீட்டுகள் மூலம் ஒரு நிதியாண்டில் ரூ.1,77,530/– செலவிடப்பட்டுள்ளது தமக்கு வேண்டிய நிறுவனங்கள் மூலம் பணிகளை மேற்கொள்ளலாமென செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சி/முடிவு என்பதை இம்முறைகேடு தெளிவாக்கியுள்ளது. மேலும், இதற்கான செலவினத் தொகைகள் அனைத்தையும் பேரூராட்சி செயல் அலுவலரின் வரம்பிற்குள் மேற்கொண்டுள்ளது மிகவும் சாதுர்யமான/பாதுகாப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ள செயலென்பதையும் காணமுடிகிறது.
- தெருவிளக்கு பராமரிப்பு மின்சாதனப் பொருட்கள் வாங்கிய வகையில் செலுத்துச் சீட்டு எண்.914/10.2.2019ல் ரூ.1,80,800/–, 919/10.2.2019ல் ரூ.1,85,700/–, செலுத்துச் சீட்டு எண்.920/10.2.2019ல் ரூ.4,97,000/– ஆக மொத்தம் ரூ.8,63,500/– ஒரே நாளில் அதாவது 10.2.2019 அன்று மட்டுமே செலவிடப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இதற்கான காரணம் ஏதும் ஒடுகத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரது

அறிக்கையில் தெளிவுபடுத்தப்படவில்லை. அதே போல் செலுத்துச் சீட்டு எண்.985/26.2.2019ல் ரூ1,98,210/—க்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டு, ஸ்ரீ ஜெயம் ஏஜென்ஸீஸுக்கு வழங்கப்பட்டுள்ளதும் தெளிவாகிறது. ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்டுள்ள மிகைச் செலவினங்களுக்கான காரணம்/அவசியம் எடுத்துரைக்கப்படாத நிலையிலும், வாங்கப்பட்ட பொருட்களுக்கான Invoice நகல் சமர்ப்பிக்கப்படாததாலும், மனுதாரரால் இதுகுறித்து எழுப்பப்பட்டுள்ள சந்தேகத்தினை மறுத்திட இயலாது என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

9. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் பேரூராட்சியில் 2019—2020ஆம் ஆண்டில் பேரூராட்சி அலுவலக கணினி பராமரிப்புக்கு ஒப்பந்த நிறுவனம் ஏதும் இறுதி செய்யப்படாமலேயே அந்த நிதியாண்டில் ஏ.வி.டி கம்ப்யூட்டர்ஸ் மற்றும் சன் சிஸ்டம் சொலுசன் ஆகிய இரு நிறுவனங்களுக்கு டோனர் மற்றும் ரிபிள், பழுது நீக்க செலவினங்கள் வகையில் ரூ.1,77,530/— பேரூராட்சி நிர்வாகத்தினால் தொகை செலுத்துச்சீட்டுகள் மூலம் வழங்கப்பட்டும், மேற்படி நிறுவனங்களிடமிருந்து நடைமுறையிலுள்ள விதிகளின்படி 2 சதவீத வருமான வரி பிடித்தம் செய்யாத வகையில் ரூ.3,550/— இழப்பு ஏற்பட்டுள்ள நிலையில், மேற்படி தொகையினை பிடித்தம் செய்து உரிய அரசு தலைப்பில் செலுத்தி அதன் விவரத்தை தணிக்கைக்கு சமர்ப்பிக்கவேண்டுமென உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினால் தணிக்கைத் தடை ஏற்படுத்தப்பட்டு, நிலுவையில் உள்ளது தெளிவாகிறது.

உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை அறிக்கையின் பகுதி நகலின்படி (Extract) பொது நிதி கணினி பயன்பாடுகள் ஆண்டு பராமரிப்பு செலவின அடிப்படையில் மேற்கொள்ளப்படாமல் கூடுதலாக செலவிட்டுள்ளதற்கு உரிய பின்னேற்பு பெறப்படவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மின்சாதனப் பொருட்கள், பொது சுகாதாரப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்ட வகையில் இறுதி செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட தொகையில் பிடித்தங்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தெளிவாக்கப்படவில்லை. மேலும், முறையாக மேற்கொள்ளப்பட்ட கொள்முதல்களுக்கான பொருட்கள் அனைத்தும் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யட்டுள்ளன என்பதை பதிவேட்டின் நகல்கள் வழங்கப்படாத நிலையில் இம்முறைமன்ற நடுவத்தினால் உறுதிசெய்திட இயலவில்லை. ஒடுகத்தூர் பேரூராட்சியில் 2019—2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்முதல்களில் விதிமீறல்கள் நடைபெற்றுள்ளன என்பது இம்முறைமன்ற நடுவ விசாரணையின் மூலம் தெளிவாகிறது. இதற்குப் பொறுப்பான பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு, கடுமையான தண்டனைகளை வழங்குமாறு பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடப்படுகிறது. மேலும், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினால் சுட்டிக்காட்டப்பட்டு நிலுவையில் உள்ள வருமான வரிப் பிடித்தங்களை மேற்கொள்ளாததால் ஏற்பட்டுள்ள நிதியிழப்புத் தொகை ரூ.3,550/—ஐ சம்மந்தப்பட்ட நபர்களிடமிருந்து வசூலித்து உரிய அரசு தலைப்பின் கீழ் செலுத்தி அதன் விபரத்தை தணிக்கைத் துறைக்கு சமர்ப்பிக்க உரிய மேல் நடவடிக்கையினை விரைந்து

மேற்கொள்ளுமாறு வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022ஆம் ஆண்டு, மே திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. C. ராஜவேலு,
H-4, பாலார் கார்டன், சத்துவாச்சாரி, வேலூர்–632 009
செயல் அலுவலர், ஒடுகத்தூர் பேரூராட்சி, ஒடுகத்தூர், வேலூர் மாவட்டம்
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் மண்டலம், வேலூர்
பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளருக்காக
31.5.22